வர்களின் வாரிசுகளுக்கு மற்றக் கழகங்களில் வேலைவாய்ப்பு இருந்து, அவர்களுக்கு அந்தக கழகங்களில் வேலை வாய்ப்பு அளிப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு போக்குவரத்துக் கழகமும் தனித்தனி நிர்வாக அமைப்புக்களைக் கொண்டது. ஆகவே, ஒரு போக்குவரத்துக் கழகத்திலே பணியாற்றும்போது இறந்து விட்ட தொழிலாளியின் வாரிசுக்கு, இன்னொரு போக்கு வரத்துக் கழகத்திலே வேலைவாய்ப்பு அளிப்பது என்பது இயலாத காரியம்.

ஒட்டன்சத்திரம் மற்றும் தொப்பம்பட்டி ஒன்றியங்களைப் பிரித்தல்.

2181—திரு. பி. காளியப்பன் :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரிய ஒன்றியங்களான ஒட்டன்சத்திரம் மட்டும் தொப்பம்பட்டியை மூன்று ஒன்றியங்களாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பி. காளியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொப்பம்பட்டி, ஒட்டன்சத்திரம் ஆகிய இரண்டு ஒன்றியங்களும் 75 ஊராட்சி மன்றங்களைக் கொண்டது. அவற்றை மூன்றாகப் பிரித்துக் கொடுக்கும் எண்ணம் அரசிடம் உள்ளதா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தனலவர் : மூலக் கேள்வியே அதுதான். எனவே, துணைக் கேள்விக்கு இடமில்லை.

திரு. வீ. பெ. துரைசாமி : (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இதுபோன்ற பெரிய ஒன்றியங்களையெல்

லாம் பிரிக்க வேண்டுமென்ற முறையீடு அரசுக்கு வந்துள்ளதா? அப்படியென்றால், எத்தனை ஒன்றியங்களைப் பிரிக்க வேண்டும் என்று வந்துள்ளது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருசில ஒன்றியங்களிலிருந்து அப்படி முறையீடுகள் வந்துள்ளன. எத்தனை என்பதற்கான விவரங்கள் என்னிடம் இல்லை. அதற்குப் பிரத்தியேகமான கேள்வி போட வேண்டும். இருந்தாலும், அவை அத்தனையும் அரைகுறையாக இருந்த காரணத்தினால், 1991-ஆம் ஆண்டுவரை, எதையும் பிரிக்கக் கூடாது; சேர்க்கக் கூடாது என்று ஒரு தடை ஆணை இருக்கிற காரணத்தினால் அதுபற்றித் தற்போது பரிசீலிப்பதற்கு இல்லை.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி ஆகிய இவை பழனி தாலூக்காவில் அடங்கியவை. இந்த இரண்டு ஒன்றியங்களும் மிகப் பெரியவை. அதனால், உண்மையிலேயே நிர்வாக வேலைகளுக்கு மிகவும் பாதகமான சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. எனவே, இந்த ஆண்டு தேர்தல் வேறு நடக்கிற காரணத்தினால், தேர்தலுக்கு முன்பாக அந்த ஒன்றியங்களைச் சம அளவு பிரித்துக் கொடுத்தால், நிர்வாகம் நடப்பதற்கும், நாங்களும், ஒன்றியத் தலைவர்களும் அங்கே சென்று செயல்படுவதற்கும் வசதியாக இருக்கும். அதைச் சம அளவு பிரிப்பதற்கு மீண்டும் அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : இதுவும் மூலக் கேள்வி தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துணை கேள்வியை, புதிதாகச் செய்தி வருகிற மாதிரிக்கேட்க வேண்டும். கேட்டதையே திருப்பிக் கேட்பது என்பது, கேள்வியைக் கேட்க வேண்டும் என்பதற்காகக் கேட்பதாக உள்ளது. (குறுக்கீடு) அது எல்லோருக்கும் தெரிந்ததுதான். மூலக் கேள்வி கேட்டு, அதற்கு அமைச்சர் விடை சொல்லி விட்டால், அதே கேள்வியைக் கேட்காமல், புதிய கேள்வியைக் கேட்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே உள்ள ஊராட்சி ஒன்றியங்கள்—இதுபோல பெரிய ஊராட்சி ஒன்றியங்கள் மட்டுமல்லாமல், ஊராட்சி மன்றங்கள் கூட, நான்காயிரம் வாக்குகள்; ஐந்தாயிரம் வாக்குகள் உள்ள அளவுக்கு இருக்கின்றன. அதையும் பிரித்துக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

ாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டது, பஞ்சாயத்து பேரூராட்சி, மற்றும் நகராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள் அனைத்துக்கும் பொருந்தும்.

நகர மன்றங்களின் வரி முறையீட்டுக் குழுவின் அதிகார வரம்பை உயர்த்துதல்.

0 3822—திரு. மெ. ஆண்டி அம்பலம்:

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தற்போது அமுலில் உள்ள நகர மன்றங்களின் வரி முறையீட்டுக் குழுவுக்குள்ள அதிகார வரம்பை உயர்த்த வேண்டுமென அரசிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள முடிவென்ன?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நகராட்சி மற்றும் நகரியங்களில் வரி மேல் முறையீட்டுக் குழுவிற்கு செய்யப்படும் மனுக்கள் மீது, உயர்த்தப்பட்ட வரியில் 5 விழுக்காட்டுக்குக் கூடுதலாக வரி குறைப்பு செய்யக்கூடாது என்று விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாட்டை நீக்கி தற்போது அரசு ஆணையிட்டிருக்கிறது.

திரு. ஒங். வெங்கடேஸ்வர தீட்சிதர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சிகளில், டேக்சேஷன் அப்பீல் கமிட்டி', அதாவது வரிவிதிப்புக் கமிட்டி என்று இருக்கிறதே, அதனுடைய அதிகாரம் பற்றி அமைச்சர் சொன்னார்கள். ஆனால் வரி போடுகிற அதிகாரம் கமிஷனருக்கு இருக்கிறது. வரி போடுவதைப் பரிசீலனை செய்வதற்கு முறையீட்டுக் கமிட்டிக்கு நாம் அப்பீல் செய்யும்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS